www.ecourtsindia.com

**DEPOSITION OF WITNESS**

*(Chapter XXIII code of Criminal Procedure)*

In the Court of Principal Special Judge for CBI Cases
VIII Additional City Civil Court, Chennai – 104.

Calendar Case } **C.C.No. 6/2019**

Deposition of witness{Prosecution **PW: 5** **(LW 47)**
Name : Mr. Ashok Gopinath
Father's Name : Mr. K. M. Radha Krishnan
Address : District Registrar Office, Madurai (South),
No.171, Palace Road, Madurai – I
Profession : Sub Registrar
Age : 46 years

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the 06th day of August, 2022.

**Chief Examination:**

நான் தற்போது மதுரை தெற்கு பதிவு மாவட்ட அலுவலகத்தில் நிர்வாக சார் பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். 01.04.2016 முதல் 31.08.2017 வரை பாளையம்கோட்டை - I, இணை சார் பதிவாளராக பணிபுரிந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் 26.04.2017 தேதியிட்ட கடிதம் நான் திரு. L.S. Padmakumar, Superintendent of Police, CBI, ACB, Chennai க்கு அனுப்பிய கடிதம் ஆகும். மேற்கூறிய SP 25.04.2017 அன்று மின்னஞ்சல் மூலம் கோரிய விவரங்கள் மற்றும் ஆவணங்களுக்கு மேற்படி கடிதத்தின் மூலம் பதிலளித்துள்ளேன். அந்த கடிதத்தின்படி, அழகர், தகப்பனார் பெயர் புதியமுத்து என்பவர் பெயரில் பாளையம்கோட்டை - I,

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN
Digitally signed by K DHANASEKARAN
Date: 2022.08.06 17:54:16 +0530

Principal Special Judge for CBI Cases, Chennai

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-5.pdf

இணை சார் பதிவு அலுவலகத்தில் எந்தவித ஆவணப்பதிவும் ஏற்படவில்லை என்றும், ஆனால் திருமதி இராஜபுஷ்பம் கணவர் பெயர் அழகர் என்பவர் பெயரில் ஆவண எண் 519/2014 என்ற ஆவணம் 03.02.2014 தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி கடிதத்துடன் ஆவண எண் 519/2014 க்கான சான்றொப்பமிட்ட நகலையும் சிபிஐக்கு அனுப்பினேன். அந்த கடிதத்துடன் சேர்ந்த ஆவணம் **அ.சா.ஆ.11 (பதினாறு தாள்கள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கிரைய ஆவணத்தின்படி, திரு. சுப்பு கிருஷ்ணமூர்த்தி தந்தையார் பெயர் அய்யாதுரை என்பவர் திருமதி. அ. இராஜபுஷ்பம் கணவர் பெயர் அழகர் என்பவருக்கு பாளையம்கோட்டை பதிவு மாவட்டத்துக்குட்பட்ட பாளையம்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்துக்குட்பட்ட பாளையம்கோட்டை முனிசிபல் வார்டு எண் 7 பின் 12 வது வார்டு தற்போது திருநெல்வேலி மாநகராட்சி 14 வது வார்ட்டில் அமைந்துள்ள கிறிஸ்து கோவில் தெரு, Town Survey Ward No.1 Block No.2, Town Survey No.123 க்கு கதவு எண் 11A ல் அமைந்துள்ள 1667.53 சதுர அடி (154.92 சதுர மீ.) கொண்ட மனையும் அதில் அமைந்துள்ள 50 சதுர மீட்டர் அளவுள்ள மதராஸ் மட்டப்பா வீடும் கொண்ட சொத்தை ரூ.13,00,000/- க்கு ரொக்கமாக 03.02.2014 அன்று கிரைய ஆவணம்

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN

Digitally signed by K DHANASEKARAN
Date: 2022.08.06 17:54:26 +0530

Principal Special Judge for CBI Cases, Chennai

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-5.pdf

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com



519/2014 ஆக மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அச்சமயம் மேற்படி சொத்து அமைந்துள்ள தெருவுக்கான அரசு வழிகாட்டி மதிப்பு சதுர மீட்டருக்கு ரூ.7,400/- ஆகும். மேற்படி கிரையத்துக்கு முத்திரை தீர்வை 7 % என்ற முறையில் ரூ. 91,000/- மற்றும் பதிவு கட்டணம் 1 % என்ற முறையில் ரூ.13,150/- செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் சம்பந்தமாக சிபிஐ அதிகாரிகள் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை -**

அ.சா.ஆ.11 ல் கண்டுள்ள கிரைய ஆவணம் பதிவு செய்யும்போது அந்த அலுவலகத்தில் நான் சார் பதிவாளராக பணி செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.11 ல் பார்வையில் கண்டுள்ள மின்னஞ்சல் பதிவு நகல் இணைக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.11 ல் கண்டுள்ள கிரைய ஆவணத்தில் நான் சான்றொப்பம் செய்யும்போது உண்மை நகல் என்று எழுதவில்லை என்றால் சரிதான். அ.சா-ஆ.11 ல் கண்டுள்ள கிரைய ஆவணத்தில் பக்கம் எண் 6 ல் பணப்பற்று விவரத்தில் கிரையம் கொடுப்பவர் கிரையம் வாங்குபவரிடமிருந்து ரூ.13,00,000/- ரொக்கமாக பெற்று

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN
Digitally signed by K DHANASEKARAN
Date: 2022.08.06 17:54:36 +0530

Principal Special Judge for CBI Cases, Chennai

Adobe

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-5.pdf

பணப்பற்று விவரம் சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான்.

**மறு விசாரணை** - இல்லை.

Sd./

Signature of witness

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN

Digitally signed by K DHANASEKARAN
Date: 2022.08.06 17:54:45 +0530

Principal Special Judge for CBI Cases, Chennai

www.ecourtsindia.com

copy view

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-5.pdf